இனிமையான குழந்தைகளே! சுப காரியத்தில் தாமதம் செய்யக் கூடாது. தங்களின் சகோதர சகோதரிகளை அடிவாங்குவதில் இருந்து காப்பாற்ற வேண்டும். (ஞானத்தின்) பூம்-பூம் செய்து தங்களுக்கு சமமாக ஆக்க வேண்டும்.

கேள்வி: எந்த விஷயத்தில் அனர்த்தமாவதால் (அர்த்தம் மாறியதால்) பாரதம் சோழி போல் ஆகி விட்டுள்ளது?

பதில்: கீதையின் சுவாமியை (படைத்தவரை) மறந்து, கீதை ஞானத்தால் ஜென்மம் எடுத்தவராகிய குழந்தையை ஸ்வாமி எனச் சொல்லி விட்டுள்ளனர். இந்த ஒரே பெயர் மாற்றத்தின் (அனர்த்தத் தின்) காரணத்தால் தான் அனைவரும் தந்தையிடமிருந்து முகத்தைத் திருப்பிக் கொண்டவர்களாக ஆகியுள்ளனர். பாரதம் சோழி போல் ஆகியுள்ளது. இப்போது குழந்தைகளாகிய நீங்கள் தந்தையிட மிருந்து நேரடியாக உண்மையான கீதையைக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். இந்த கீதை ஞானத்தினால் தான் தேவி-தேவதா தர்மம் ஸ்தாபனை ஆகின்றது. நீங்கள் கிருஷ்ணருக்கு சமமாக ஆகிறீர்கள்.

பாடல்: யார் இந்த விளையாட்டை யெல்லாம் உருவாக்கினார்?........

ஓம் சாந்தி. பிராமணகுல பூஷணர்களாகிய குழந்தைகள் புரிந்து கொண்டுள்ளனர், நிச்சயமாக நமக்கு சொர்க்கத்தில் அளவற்ற சுகம் இருந்தது. நாம் மிகவும் சுகமாக இருந்தோம். ஜீவாத்மாக் களாகிய நாம் சொர்க்கத்தில் மிகவும் மகிழ்ச்சியின் போதையில் இருந்தோம். பிறகு என்ன வாயிற்று? பல வண்ண, வடிவத்தில் மாயா வந்து வசப்படுத்தி விட்டது. விகாரங்களின் காரணத் தால் தான் இது நரகம் எனப்படுகின்றது. நரகமோ முழுவதும் தான். இப்போது குளவியின் உதாரணம் தருகின்றனர். குளவி, பிராமணி இருவரின் வேலையும் ஒன்று தான். குளவியின் உதாரணம் உங்களைப் பற்றியதாகும். குளவி புழுவை எடுத்துச் செல்கிறது. வீட்டை அமைத்து அதில் புழுவைப் இட்டு வைக்கிறது. இதுவும் (உலகம்) நரகம். அனைவரும் புழுக்கள். ஆனால் அனைத்துப் புழுக்களும் தேவி-தேவதா தர்மத்தினர் கிடையாது. இருக்கிற எல்லா தர்மத்தினரும் நரகவாசிப் புழுக்கள். இப்போது தேவி-தேவதா தர்மத்தின் புழுக்கள் யார்? இதை எப்படித் தெரிந்து கொள்வது-இவர்கள் பிரம்மா முகவம்சாவளி பிராமணிகள், அமர்ந்து பூம்-பூம் செய்யக் (ஞானம் கூறக்) கூடியவர்கள் என்று? யார் தேவதா தர்மத்தவர்களோ, அவர்கள் தான் நிற்க முடியும். யார் அப்படி இல்லையோ அவர்கள் நிலைத்து நிற்க முடியாது. நரகவாசிப் புழுக்களோ அனைவருமே தான். சந்நியாசிகளும் இதையே சொல்கின்றனர்-நரகத்தின் இந்த சுகம் காக்கையின் எச்சத்துக்கு சமமானது. சொர்க்கத்தில் அளவற்ற சுகம் இருக்கும் என்பது அவாகளுக்குத் தெரியாது. இங்கே 5 சதவிகிதம் சுகம், 95 சதவிகிதம் துக்கம். ஆகவே இது ஒன்றும் சொர்க்கம் எனச் சொல்லப்பட மாட்டாது. சொர்க்கத்திலோ துக்கத்தின் விஷயமே இருக்காது. இங்கே அநேக சாஸ்திரங்கள், அநேக தர்மங்கள் மற்றும் அநேக வழிமுறைகள் ஆகிவிட்டுள்ளன. சொர்க்கத்திலோ ஒரே ஓர் அத்வைத (பிளவுபடாத) தேவதா தர்மம். ஆக, நீங்கள் பிராமணிகள். நீங்கள் பூம்-பூம் செய்கிறீர்கள். பிறகு யார் இந்த தர்மத்தைச் சேர்ந்தவர்களோ அவர்கள் நின்று நிலைப்பார்கள். அநேக விதமாக உள்ளனர். சிலர் இயற்கையை ஏற்கின்றனர், சிலர் விஞ்ஞானத்தை ஏற்கின்றனர், சிலர் சொல் கின்றனர்-இந்த சிருஷ்டி

கற்பனை மட்டுமே என்பதாக. இதுபோன்ற வாதம் இங்கே தான் நடை பெறுகின்றது. சத்யுகத்தில் நடைபெறுவதில்லை. இந்த எல்லையற்ற தந்தை பிரஜாபிதா பிரம்மா வின் கமலவாய் மூலம் தம்முடைய குழந்தைகளுக்கு வந்து சொல்லிப் புரிய வைக்கிறார்-நீங்கள் என்னோடு இருந்தீர்கள், இப்போது மீண்டும் என்னிடம் வர வேண்டும். இதில் சாஸ்திரங்களின் விஷயமோ எழுவதில்லை. கிறிஸ்து மற்றும் புத்தர் வருகின்றனர். அவர்களும் வந்து சொல் கின்றனர். அச்சமயத்திலோ சாஸ்திரங்கள் பற்றிய கேள்வி எழ முடியாது. கிறிஸ்து பைபிள் படித்தாரா என்ன? பைபிள் பற்றிய கேள்வியே எழுவதில்லை. பாபா சொல்கிறார் - குழந்தைகளே, நீங்கள் உங்கள் நிலையைப் பாருங்கள். மாயா இராவணன் உங்கள் நிலையை என்னவாக ஆக்கி விட்டுள்ளான்! புரிந்திருக்கவும் செய்கிறார்கள், நாம் அசுர இராவண சம்பிர தாயத்தினர் என்று. இராவணனை எரிக்கின்றனர், ஆனால் அவன் எரிவதில்லை. இராவணனை எரிப்பது எப்போது நிற்கும்? இது மனிதர்களுக்குத் தெரியாது. நீங்கள் ஈஸ்வரிய தெய்வீக சம்பிரதாயத்தினர். நீங்கள் என்னுடைய குழந்தைகள் இப்போது நான் மீண்டும் வந்துள்ளேன், குழந்தைகளாகிய உங்களுக்கு இராஜயோகம் கற்பிப்பதற்காக. அநேக தர்மங்கள் உள்ளன. அவற்றி-ருந்து வெளிவருவதற்கு எவ்வளவு முயற்சி செய்ய வேண்டியுள்ளது! கீதையும் கூட எங்கிருந்து வந்தது? ஆதி சநாதன தர்மத்தின் அடையாளம் எங்கிருந்து வெளிப் பட்டது? பிறகு ரிஷி-முனி முதலானோர் அமர்ந்து அவற்றை உருவாக்கி இன்று வரையிலும் கேட்டு வந்துள்ளனர். வேதத்தை யார் பாடினார்? வேதங்களின் தந்தை யார்? பாபா சொல்கிறார், கீதையின் பகவான் நான் தான். கீதையாகிய தாயைப் படைத்தவர் சிவபாபா, அதனிடமிருந்து பிறவி எடுத்தார், கிருஷ்ணர். அவரோடு கூடவே இராதை முதலான அனைவரும் வந்து விடுகின்றனர். முதலில் இருப்பவர்கள் பிராமணர்கள்.

குழந்தைகளாகிய உங்களுக்கு நிச்சயம் உள்ளது - அவர் நம்முடைய மிகமிக அன்பான தந்தை - அவரைத் தான் அனைவரும் அழைக்கின்றனர், ஓ காட் ஃபாதர், இரக்கம் காட்டுங்கள் என்று. பக்தர்கள் அழைக்கின்றனர், எப்படி துக்கத்திலிருந்து விடுபடுவது என்று. பகவான் சர்வவியாபி என்றால் பிறகு அழைப்ப தற்கான விஷயமே இல்லை. முக்கியமானது கீதையின் விஷயம். எத்தனை யக்ஞம் முதலானவற்றைப் படைக் கின்றனர்! இப்போது நீங்கள் அப்படிப்பட்ட துண்டறிக் கைகளை அச்சிடுங்கள். இப்போது எவ்வளவு அர்த்தமற்றதாக ஆகிவிட்டுள்ளது! எங்கெங்கே பார்த்தாலும் கீதையை எழுதி வைத்துக் கொண்டே இருக்கின்றனர். கீதையை யார் படைத்தார், யார் பாடினார், எப்போது பாடினார், யார் உருவாக்கினார், எதுவும் தெரியாது. ஸ்ரீகிருஷ்ணர் பற்றியும் சரியான அறிமுகம் கிடையாது. அவ்வளவு தான், சொல்லி விடுகின்றனர்-எங்கே பார்த்தாலும் சர்வவியாபி கிருஷ்ணரே கிருஷ்ணர் என்பதாக. இராதையின் பக்தர்கள் இராதை பற்றிச் சொல்வார் கள், சர்வவியாபி ராதையே ராதை என்று. ஒரு நிராகார் பகவான் பற்றி மட்டுமே சொன்னால் கூடப் பரவாயில்லை. அனைவரையும் ஏன் சர்வவியாபி என்கிறார்கள்? கணேஷ் பற்றியும் சர்வவியாபி எனச் சொல்வார்கள். ஒரே மதுரா நகரத்தில் உள்ள சிலர் சொல்வார்கள், ஸ்ரீகிருஷ்ணர் சர்வவியாபி என்று. சிலர் சொல்வார்கள் ராதை சர்வவியாபி என்று. எவ்வளவு குழம்பிப் போயுள்ளனர்! ஒருவரின் வழிமுறை மற்றவருடையது போல் இல்லை. ஒரே வீட்டில் தந்தையின் குரு வேறு என்றால் குழந்தையின் குரு வேறு. உண்மையில் வானப்ரஸ்த நிலையில் தான்

குரு மேற்கொள்ளப்படுகிறார். பாபா சொல்கிறார், நானும் இவருடைய வானப்ரஸ்த நிலையில் வந்துள்ளேன். உலகத்திலோ ஒரு குரு எவ்வளவு பெரிய குருவாக உள்ளாரோ அவ்வளவு நஷா அவருக்கு உள்ளது. ஆதி தேவருக்கு மகாவீர் என்றும் பெயர் வைத்துள்ளனர். அனுமானையும் கூட மகாவீர் என்கிறார்கள். சக்திகளாகிய நீங்கள் தான் மகாவீர்! தில்வாடா கோவிலில் சக்திகளை சிங்கத்தின் மீதும், பாண்டவர்களை யானை மீதும் சவாரி செய்வதாகக் காட்டுகின்றனர். அந்தக் கோவில் மிகவும் யுக்தியுடன் உருவாக்கப்பட்டுள்ளது. அது அப்படியே உங்களுடைய நினைவுச் சின்னமாக உள்ளது. நீங்களோ அந்தச் சமயத்தில் இல்லை, உங்களுடைய சித்திரங்களைக் கொடுப்பதற்கு. கோவிலோ துவாபரயுகத்தில் உருவாக்கப்பட்டது எனும்போது உங்களுடைய சித்திரங்கள் எங்கிருந்து வரும்? சேவையை நீங்கள் இப்போது செய்து கொண்டிருக்கிறீர்கள். விஷயங்கள் அனைத்தும் இப்போதைய சமயத்தினுடையவை. அவர்கள் பின்னால் சாஸ்திரங் களை உருவாக்கியுள்ளனர். நாம் கீதையின் பெயரை எடுக்க வில்லை என்றால் மனிதர்கள் நினைப்பார்கள், இது என்ன புதுவித தர்மம் என்று தெரியவில்லையே என்று. எவ்வளவு முயற்சி செய்ய வேண்டியுள்ளது! அவர்கள் இந்த உலகத்தில் தர்ம ஸ்தாபனை மட்டும் செய்கின்றனர். உங்களை புது உலகத்திற்காக பாபா தயார் செய்கிறார்.

பாபா சொல்கிறார், நான் செய்யும் காரியம் போல் வேறு யாரும் செய்ய இயலாது. பதீதர்கள் அனை வரையும் பாவனமாக்க வேண்டியுள்ளது. இப்போது குழந்தைகளாகிய உங்களுக்கு எச்சரிக்கை தர வேண்டியுள்ளது. பாரதத்தில் எவ்வளவு அனர்த்தம் (தலைகீழ்) மாற்றம் ஆகி விட்டுள்ளது! அதன் காரணத்தால் தான் பாரதம் சோழி போல் ஆகி விட்டுள்ளது. பாபா, கீதை என்ற மாதா மூலம் கிருஷ்ணருக்கு ஜென்மம் கொடுத்தார். அவர்கள் பிறகு கிருஷ்ணரை கீதையின் ஸ்வாமி (ஆசிரியராக) ஆக்கி விட்டுள்ளனர். கீதையின் ஸ்வாமியோ (படைப்பாளி) சிவன் ஆவார். அவர் கீதை மூலம் கிருஷ்ணருக்குப் பிறவி கொடுத்தார். நீங்கள் அனைவரும் சஞ்சய். சொல்பவர் ஒரே ஒரு சிவபாபா. புராதன தேவி-தேவதா தர்மத்தை ஸ்தாபித்தவர் யார்? இவை அனைத்தையும் எழுதுவதற்கு புத்தி வேண்டும். கீதை மூலம் நாம் பிறவி எடுத்துக் கொண்டிருக்கிறோம். மம்மா ராதையாகவும் இவர் பிறகு கிருஷ்ணராகவும் ஆவார். இவை மறைமுகமான விஷயங்கள் இல்லையா? பிராமணர்களின் பிறவி பற்றி யாராலும் புரிந்து கொள்ள இயலாது. விஷயமே கிருஷ்ணர் மற்றும் பரமாத்மா பற்றியது. பிரம்மா, கிருஷ்ணர், சிவபாபா - இந்த அனைத்து விஷயங் களும் மறைமுகமானவை இல்லையா? இவ்விஷயங்களைப் புரிந்து கொள்ளக்கூடிய பெரிய புத்திவான் வேண்டும். யாருக்கு யோகம் முழுமையடையுமோ, அவர்களின் புத்தி தங்கமாக ஆகிக் கொண்டே செல்லும். அலைகின்றவர்களின் புத்தியில் இது நிற்காது. பாபா குழந்தைகளாகிய உங்களுக்கு எவ்வளவு உயர்ந்த ஞானத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்! மாணவர்கள் தங்களின் புத்தியையும் பயன்படுத்துகின்றனர் இல்லையா? ஆக, இப்போது அமர்ந்து எழுதுங்கள். சுப காரியத்தில் தாமதம் கூடாது. நாம் கடலின் குழந்தைகள், நம்முடைய சகோதர- சகோதரி களைக் காப்பாற்ற வேண்டும். அவர்கள் பாவம் ஏமாற்றமடைந்து கொண்டே இருக் கின்றனர். சொல்வார்கள், பி.கே.க்கள் இவ்வளவு கஷ்டப்பட்டு சேவை செய்கின்றனர் என்றால் அதில் ஏதோ இருக்கத் தான் செய்யும். லட்சம் துண்டறிக்கைகள் அச்சடித்து கீதாப்

பாடசாலைகள் முதலான வற்றில் கொடுங்கள். பாரதம் அவிநாசிக் கண்டம், மேலும் சார்வோத்தம தீர்த்த ஸ்தலம். எந்தத் தந்தை அனைவருக்கும் சத்கதி அளிக்கிறாரோ, அவருடைய தீர்த்த ஸ்தலத்தை மறைத்து விட்டுள்ளனர் என்றால் பிறகு அவரது பெயரை வெளிப்படுத்த வேண்டும். பூக்களால் அர்ச்சிக்கப் படத்தக்கவர் ஒரே ஒரு சிவபாபா மட்டுமே. மற்ற அனைத்துமே வீணானவை. கீதா பாடசாலைகள் அநேகம் உள்ளன. நீங்கள் வேஷத்தை மாற்றிக் கொண்டு அங்கே செல்லுங்கள். பிறகு அவர்கள் புரிந்து கொள்ளட்டும் இவர்கள் பி.கே.யாக இருப்பார்கள் என்று. அதுபோல் கேள்விகளை யாரும் கேட்க முடியாது. நல்லது.

நீங்கள் புரிந்து கொண்டிருக்கிறீர்கள், சிவபாபா, பிரம்மா உடல் மூலம் வந்து இந்த விஷயங்களைப் புரிய வைக்கிறார். சொர்க்கத்தின் மாலிக் ஆக்குபவரான பாபா இப்போது வந்துள்ளார். எதுவரை பிராமணன் ஆகவில்லையோ, அதுவரை தேவதா ஆக முடியாது. பிராமணகுலம் தேவதைகளை விட உயர்ந்ததாகும். அனைவருக்கும் ஆத்மா பாவனமாகிக் கொண்டிருக்கிறது. நீங்கள் பிறகு புது உலகத்தில் புனர்ஜென்மம் எடுப்பீர்கள்.

இனிமையிலும் இனிமையான தேடிக் கண்டெடுக்கப் பட்ட குழந்தைகளுக்குத் தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் காலை வணக்கம். ஆன்மிகக் குழந்தைகளுக்கு ஆன்மிகத் தந்தையின் நமஸ்தே.

இரவு வகுப்பு **12.01.1969**

குழந்தைகள் நீங்கள் தந்தையின் நினைவில் அமர்ந்திருக்கிறீர்கள். ஒருவரின் நினைவில் அமர்வது தான் அவ்யபிச்சாரி நினைவு எனச் சொல்லப்படுகின்றது. இங்கே அமர்ந்திருந்த போதும் வேறு யாருடைய நினைவாவது வருமானால் அதை கலப்பட நினைவு எனச் சொல்வார்கள். உண்பது, அருந்துவது, இருப்பது ஒரு வீட்டில், ஆனால் வேறொருவரை நினைவு செய்வதென்பது ஏமாற்று வதாகும். பக்தியும் எதுவரை ஒரு சிவபாபாவுக்கு செய்கிறார்களோ, அதுவரை கலப்பட மற்ற பக்தி ஆகின்றது. பிறகு மற்றவர்களை நினைவு செய்வதென்பது விபச்சாரி பக்தி ஆகி விடுகின்றது. இப்போது குழந்தைகளாகிய உங்களுக்கு ஞானம் கிடைத்துள்ளது. ஒரு தந்தை எவ்வளவு அற்புதங்கள் செய்கிறார்! நம்மை உலகத்தின் மாலிக் ஆக்குகின்றார். ஆக, அந்த ஒருவரையே நினைவு செய்ய வேண்டும். எனக்கோ ஒருவர் தான். ஆனால் குழந்தைகள் சொல்கின்றனர், சிவபாபாவின் நினைவு மறந்து போகின்றது என்று. ஆஹா! பக்தி மார்க்கத்திலோ, நீங்கள் சொல்லி யிருந்தீர்கள், நாங்கள் ஒருவருக்கு மட்டுமே பக்தி செய்வோம் என்று. அவர் தான் பதீத பாவன். வேறு யாரையுமோ பதீத பாவனன் எனச் சொல்வதில்லை. ஒருவர் தான் சொல்லப்படுகிறார். அவர் தாம் உயர்ந்தவரிலும் உயர்ந்தவர். இப்போதோ பக்தியின் விஷயமே கிடையாது. குழந்தை களுக்கு ஞானம் உள்ளது. ஞானக்கடலை நினைவு செய்ய வேண்டும். பக்தி மார்க்கத்தில் சொல் கின்றனர், நீங்கள் வருவீர்களானால் நாங்கள் உங்களை மட்டுமே நினைவு செய்வோம். ஆக, இவ்விஷயங்களை நினைவு செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் தன்னைத் தான் கேட்டுக் கொள்ள வேண்டும் - நாம் ஒரே ஒரு தந்தையை நினைவு செய்கிறோமா, அல்லது அநேக உற்றார்-உறவினர் முதலானவர்களை நினைவு செய்கிறோமா? ஒரு பாபாவிடம் மட்டுமே மனதை ஈடுபடுத்த வேண்டும். மனம் வேறெங்காவது சென்றால்

நினைவு கலப்படமானதாக ஆகி விடு கின்றது. பாபா சொல்கிறார், குழந்தைகளே, என்னை மட்டுமே நினைவு செய்யுங்கள். பிறகு அங்கே உங்களுக்கு தெய்வீக உறவினர்கள் கிடைப்பார்கள். புது உலகத்தில் அனைத்தும் புதியதாகக் கிடைக்கும். ஆக, தன்னை சோதிக்க வேண்டும், நாம் யாரை நினைவு செய்கிறோம்? பாபா சொல்கிறார், நீங்கள் பரலௌகீகத் தந்தை யாகிய என்னை நினைவு செய்யுங்கள். நானே பதீதபாவன், முயற்சி செய்து மற்ற பக்கங்களில் இருந்து புத்தியோகத்தை விலக்கி பாபாவை நினைவு செய்ய வேண்டும். எவ்வளவு நினைவு செய்கிறீர்களோ, அந்தளவு தான் பாவங்கள் நீங்கும். நாம் எவ்வளவு நினைவு செய்கிறோமோ அதே அளவு பாபாவும் நினைவு செய்வார் என்பதில்லை. பாபாவுக்கு பாவங்கள் எதுவும் நீங்க வேண்டியதில்லை. இப்போது நீங்கள் இங்கே அமர்ந்திருக் கிறீர்கள், பாவன மாவதற்காக. சிவபாபாவும் இங்கே இருக்கிறார். அவருக்கென்று சரீரமோ கிடையாது. கடனாகப் பெறப்பட்டுள்ளது. பாபாவிடம் நீங்கள் உறுதிமொழி கொடுத்துள்ளீர்கள் - பாபா, நீங்கள் வருவீர்களானால் நாங்கள் உங்களுடையவர்கள் ஆகி புது உலகத்தின் மாலிக் (எஜமான்) ஆவோம். உங்கள் மனதைக் கேட்டுக் கொண்டே இருங்கள். இதையோ அறிவீர்கள், புத்தியோகத்தின் இணைப்பு அடிக்கடி பாபாவிடமிருந்து விடுபட்டுப் போகின்றது. பிறகு நினைவு செய்வார்கள், பிறகு விட்டுப் போகும். குழந்தைகள் வரிசைப்படியே முயற்சி செய்யத் தான் செய்கிறார்கள். நல்லபடியாக நினைவு செய்வீர்களானால் இந்த இராஜ்யத்தில் வந்து விடுவீர்கள். தன்னை சோதித்துக் கொண்டே இருங்கள். நாட்குறிப்பு வையுங்கள். முழு நாளிலும் நமது புத்தி யோகம் எங்கெங்கே சென்றது? ஆக, பிறகு பாபா புரிய வைப்பார். ஆத்மாவில் உள்ள மனம், புத்தி ஓடுகின்றது. பாபா சொல்கிறார், ஓடுவதால் நஷ்டம் ஏற்பட்டு விடும். என்னை நினைவு செய்வதால் மிகுந்த நன்மை உள்ளது. மற்றப்படி எல்லாமே நஷ்டத்தின் மேல் நஷ்டம் தான். முக்கியமான ஒருவரையே நினைவு செய்ய வேண்டும். தன் மேல் கவனம் வைக்க வேண்டும். ஒவ்வோர் அடியிலும் நன்மை, ஒவ்வோர் அடியிலும் நஷ்டம். 84 பிறவிகளாக தேகதாரிகளையே நினைவு செய்து நஷ்டத்தையே அடைந்தீர்கள். ஒவ்வொரு நாளாக முடிந்துபோய் 5000 ஆண்டுகளும் கடந்து விட்டன. நஷ்டமே ஏற்பட்டது. இப்போது பாபாவின் நினைவில் இருந்து நன்மை பெற வேண்டும்.

அப்படி விசார் சாகர் மந்தன் (மன சிந்தனை) செய்து ஞான இரத்தினங்களை வெளிப்படுத்த வேண்டும். பாபாவின் நினைவில் ஒருமுகப்பட்டு ஈடுபட வேண்டும். அநேகக் குழந்தைகளுக்கு சோழிகளை சேமிப்பதில் கவலை உள்ளது. .மாயா தொழில் முதலியவற்றின் சிந்தனையைக் கொண்டு வருகின்றது. பணக்காரர்களுக்கோ அதிக சிந்தனை வருகின்றது. பாபா என்ன செய்வார்? பாபாவுக்கு எவ்வளவு நல்ல தொழில் இருந்தது! அடி வாங்க வேண்டிய அவசியம் எதுவும் கிடையாது. யாரேனும் வியாபாரி வந்தாரென்றால் நான் கேட்பேன், முதலில் இதை சொல்லுங்கள், நீங்கள் வியாபாரியா அல்லது ஏஜன்ட்டா? (பாபாவின் சரித்திரம்) நீங்கள் தொழில் முதலியவற்றைச் செய்து கொண்டே புத்தியோகத்தை பாபாவிடம் வைக்க வேண்டும். இப்போது கலியுகம் முடிவடைந்து சத்யுகம் வருகிறது. பதீதமானவர்களோ சத்யுகத்திற்குப் போகவே மாட்டார்கள். எவ்வளவு நினைவு செய்வீர்களோ, அவ்வளவு பவித்திரமாவீர்கள். தூய்மையினால் தாரணை நன்றாக இருக்கும். பதீதமானவர்களோ நினைவு செய்ய முடியாது. தாரணையும் ஆகாது. சிலருக்கு அதிர்ஷ்டத்தின் அனுசாரம்

சமயம் கிடைக்கின்றது, புருஷார்த்தம் செய்கின்றனர். சிலருக்கு சமயமே கிடைக்காது, நினைவே செய்வதில்லை. யார் கல்பத்திற்கு முன் என்ன முயற்சி செய்துள்ளனரோ, அவ்வளவே செய்வார்கள். ஒவ்வொருவரும் தானாக முயற்சி செய்ய வேண்டும். வருமானத்தில் நஷ்டம் ஏற்பட்ட தென்றாலோ முன்பு சொல்லி வந்தனர், இது ஈஸ்வரனின் விருப்பம் என்பதாக. இப்போது டிராமா எனச் சொல்கிறீர்கள். எது கல்பத்திற்கு முன் நடைபெற்றதோ, அது தான் நடைபெறும். இப்போது 4 மணி நேரம் நினைவு செய்கிறீர்கள் என்றால் அடுத்த கல்பத்தில் அதிகமாக முயற்சி செய்வார்கள் என்பதெல்லாம் கிடையாது. அறிவுரை தரப்படுகின்றது. இப்போது முயற்சி செய்வீர்களானால் கல்ப-கல்பமாக நல்ல முயற்சி நடைபெறும். ஆக, சோதித்துப் பாருங்கள்-புத்தி எங்கெங்கே செல்கிறது என்பதை. மல்யுத்தத்தில் மிகவும் எச்சரிக்கை வைக்கின்றனர். நல்லது -

ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மிக பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் இரவு வணக்கம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) புத்திவான் ஆவதற்கு நினைவின் மூலம் தனது புத்தியைப் தங்கமாக ஆக்க வேண்டும். புத்தியை இங்கே அங்கே அலைய விடக் கூடாது. பாபா என்ன சொல்கிறாரோ, அதைப் பற்றித் தான் சிந்தனை செய்ய வேண்டும்.

2) குளவி ஆகி, பூம்-பூம் செய்து (ஞானம் அளித்து) நரகவாசி ஆகிவிட்ட புழுக்களை தேவி-தேவதா ஆக்குகிற சேவை செய்ய வேண்டும். சுப காரியம் செய்வதற்கு தாமதிக்கக் கூடாது. தனது சகோதர சகோதரிகளைக் காப்பாற்ற வேண்டும்.

வரதானம்: சமமான பாவனை கொண்டிருக்கும் போதும் ஒவ்வொரு அடியிலும் விசேஷத்தன்மையின் அனுபவத்தை செய்விக்கக்கூடிய விசேஷ ஆத்மா ஆகுக.

ஒவ்வொரு குழந்தையிடமும் தனித்தனியான விசேஷத்தன்மைகள் உள்ளன. விசேஷ ஆத்மாக்களின் கர்மம் சாதாரண ஆத்மாக்களிடம் இருந்து வேறுபட்டதாக இருக்கும். ஒவ்வொருவர் மீதும் சமமான பாவனை வைக்க வேண்டும், ஆனால், இவர்கள் விசேஷ ஆத்மா என்ற பார்வையில் பார்க்க வேண்டும். விசேஷ ஆத்மாக்கள் என்றால் விசேஷமானதை செய்பவர்கள், சொல்பவர்கள் மட்டும் கிடையாது. இவர்கள் அன்பின் களஞ்சியம் ஆவார்கள் என்ற உணர்வு அவர்களிடம் இருந்து அனைவருக்கும் ஏற்படும். ஒவ்வொரு அடியில், ஒவ்வொரு பார்வையில் அன்பு அனுபவம் ஆகவேண்டும், இதுவே விசேஷத்தன்மை ஆகும்.

சுலோகன்: சிருஷ்டியினுடைய பேரழிவிற்கு முன்னதாகவே தன்னுடைய குறைகள் மற்றும் பலவீனங்களை அழித்துவிடுங்கள்.